# எஸ். ராமகிருஷ்ணனின் துயில் நாவலின் நிலவியல் பண்பாடு

***இரா. புஷ்பா***
முனைவர் பட்ட ஆய்வாளர்

***தோ. இரா. பெரியசாமி***
கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி, முத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383190

**ஆய்வு சுருக்கம்**
*நிலத்திற்கும் பண்பாட்டுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. நிலவியலை மையமாகக் கொண்டே நமது பண்பாடு கட்டமைக்கப்பட்டது என்று கூறலாம். நிலத்தினை பண்படுத்தி அதில் உழவுச் செய்தோம் என்றால். அதில் ஏராளமான தானியங்களை பெறலாம். அதுபோல் ஒரு ஊரின் நிலவியலை ஆராய்ந்தோம் என்றால் அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை, சடங்குகள், தொழில்கள் போன்றவைகளை நாம் நன்கு உணர முடியும். இந்த வகையில் எஸ் ராமகிருஷ்ணனின் துயில் நாவலில் ஒரு நிலத்தின் தன்மைகளின் வழியே அங்கு வாழ்ந்த மக்களைப் பற்றியும் அவர்களது மனநிலை, வாழ்க்கை முறை, தொழில்கள் போன்றவைகளை விளக்க உள்ளது இவ்வாய்வு கட்டுரை.*

**மக்கள் வாழும் நிலவியல் வகைகள்**

***"முதல் எனப்படுவது நிலம் பொழு திரண்டின்***
***இயல்பென மொழிப இயல் புணர்ந்தோரே"***
***(தொல் -நூ -19) (ப-7)***

*என்று தொல்காப்பியர் முதற் பொருளில் நிலத்தையும் பொழுதையும் கூறுகிறார். நமது முன்னோர்கள் வாழ்க்கையினை அகம், புறம் என பிரித்தனர். அதில் அகத்திணையில் மக்கள் வாழும் நிலப்பரப்பினைக் கொண்டு ஐந்திணைகளைப் பிரித்தனர். அதனை அன்பின் ஐந்திணை என்று அழைத்தனர்.*

***"மாயோன் மேய காடுறை உலகமும்***
***சேயோன் மேய மைவரை உலகமும்***
***வேந்தன் மேய தீம்புனல் உலகமும்***
***வருணன் மேய பெருமணல் உலகமும்***
***முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்***
***சொல்லிய முறையார் சொல்லவும் படுமே"***
***(நூ- 5) (ப -8 தொல்காப்பிய பொருள் அதிகாரம்)***

*அவைகுறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவை ஆகும். இந்நிலத்தில் வாழும் மக்கள் அந்தந்த நிலவியலுக்கு ஏற்ப வாழ்க்கை முறை, தொழில்களை கொண்டு வாழ்ந்தனர். குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்கள் மலையினை ஆதாரமாகக் கொண்ட தொழிலினை செய்தனர். இவர்கள் மற்றவர்களுக்கு எந்த தீங்கும் செய்யாமல் வாழ்ந்தனர். ஆனால் பாலை நிலத்தில் எந்த வளமும் இல்லாததால் வழிப்பறி செய்தார்கள். ஒரு நிலத்தின் வளமையினைப் பொறுத்து அங்கு வாழும் மக்களின் மனநிலை அமைகிறது.*

**நிலவியலும் மனிதமனமும்**

*நாம் வாழும் சுழ்நிலைகள் நம் மனநிலையை லேசாகவும் கடினமாகவும் மாற்றுகிறது. வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும் போது எந்த காற்றும் வீசாமல் இருக்கும் போது நமக்கு எரிச்சல் உணர்வு ஏற்படுகிறது. அந்த வெக்கை நேரங்களில் ஒரு பிரச்சனையை நாம் கையாளும் விதம் கடினமானதாக இருக்கும். அதே நல்ல காற்றுடன் வெம்மை குறைந்த நேரங்களில் மனம் லேசாக காணப்படுகிறது. அந்த தருணத்தில் நாம் மிகப் கடினமான பிரச்சனைகளையும் எளிதாக கையாள்வோம். இதனையே ஆசிரியர் வெக்கை நேரத்தில் ரயிலுக்காக காத்திருப்பது எரிச்சலை தருவதாக இருக்கிறது அழகர் என்பவருக்கு.*

***"வெயிலின் மீது அழகருக்கு எரிச்சல் வந்தது என்ன எழவுக்கு இந்த வெயில் மனுஷனை இப்படி நொம்பப்படுத்தி எடுக்கிறது யார் கேட்டார்கள் வெயில் வேண்டும் என்று" (துயில் ப - 15)***

*என்று கூறுகின்றார் ஆசிரியர். இவ்வரிகள் மூலம் நாம் இருக்கும் நிலவியல் சுழல்கள் மனித மனதையும் பாதிக்கும் என்பது புலப்படுகிறது. ஒரு மனிதன் காட்டில் விலங்குகளோடு மட்டும் வாழ்கின்றான். எனில் அவன் காணும் விலங்கின் இயல்புகளை பெற்றுக் கொள்வான். என்பது எவ்வளவு உண்மையோ அதே போல் நிலவியல் அமைப்புக்கு ஏற்ப மனித மனநிலை மாறும் என்பதும் உண்மையே என்பதில் ஐயமில்லை.*

## வெயில் வருணனை

*எங்கும் வறண்டு கிடக்கும் நிலத்தில் வாழும் மனிதனை பாலைத் திணைக்கு உரியவனாக்குகிறார் தொல்காப்பியர்.*

***"முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றரிந்து***
***நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்***
***பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"***
***(சிலம்பு. காடுகாண் காதை 64 - 66)***
***(ப -16 தொல் பொருள் அதிகாரம்)***

*துயில் நாவலில் எஸ் ராமகிருஷ்ணன் அவர்கள் வெயிலினை கொண்ட வறண்ட நிலம் அழகர் என்பவனை எவ்வாறு உள்ளது என்பதை மிக அழகாக கூறுகிறார்.*

***"ரயில் நிலையத்தில் கிழக்கில் தொலைவு வரை வெட்ட வெளி மட்டுமே இருந்தது தண்டவாளங்கள் மீது வெயில் கம்பளிப் புச்சி ஊர்ந்து செல்வது போல மெதுவாக முக்கி முக்கிச் சென்று கொண்டிருந்தது சுடு தாங்க முடியாத ரயில்வே கிராதிகள் முறுக்கேறி திமிறிக் கொண்டிருந்தன. புழுதி படிந்து கசங்கி கிடந்த காகிதம் ஒன்று வெயில் தாளாமல் நடுங்கியபடி இருந்தது வானில் ஈரமே இல்லை ஒரேஒரு சூரியன் அந்த இரக்கம் இல்லாத வெயில் வீச்சு மேகமில்லாத துல்லியம் தூரத்தில் தெரியும் பனைகளின் நிழல் கூட நடுங்கிக் கொண்டிருந்தன" (துயில் ப -18)***

*என்று வெயில் கொண்ட நிலப்பரப்பினை ஆசிரியர் வர்ணிக்கின்றார். உயிரற்ற பொருள்களை இந்நிலையை அடைகிறது என்றால் அங்கே வாழும் மனிதர்களும் வெறுப்புணர்வு கொண்ட மனநிலைக்கு மாறிவிடுவர் என்பது சரியாக நமக்கு விளங்குகிறது.*

***"பாலையென் றுலர்ந்த செந்நிலக் கானற்***
***பரப்பினைப் புனலென வேடிச்***
***சாலவு மிளைத்துத் தவித்துழை யினங்க***
***டனித்தனி மறுகிய மறுக்க***
***மாலுளர்ந் திருண்ட புன்மனச் சிறியோர் மருங்கினி லிரந்திரந் திடைந்து***
***காலறத் தேய்ந்த பலகலை மேலோர் கருத்தினில் வருத்தமொத் தனவே"***
***(ப - 6 சீறாபுராணம் சுரத்தில் புனல் அழைத்தப் படலம்)***

*இவ்வாறு பாலை என்ற நிலத்தின் தன்மையால் விலங்குகள் பட்ட துன்பத்தினை உமறுப்புலவர் கூறுகிறார். வெயில் நிறைந்த பரப்பு மனிதர்கள் விலங்குகள் என எல்லோரின் மனநிலையும் உடல் நிலையையும் மாற்றுகிறது. வெயில் நிரம்பிய நிலப்பரப்பில் பணிபுரியும் மனிதர்களின் மனநிலையும் மாறிவிடும் துயில் நாவலில் ஆத்திகுளம் என்ற ரயில் நிலையத்தில் வேலை பார்க்கும் குமாரசாமியின் மனநிலையும் இவ்வாறுதான் மாறி உள்ளது என ஆசிரியர் கூறுகிறார்.*

***"சலிப்பும் வெறுமையும் அவரை பலமாக பிடித்திருக்கின்றன அதனால் அவரது இயல்பு சிடுசிடுப்பாகவே மாறி இருக்கிறது" (துயில் ப-23)***

*இவ்வரிகள் மூலம் வெயில் எவ்வாறு கடினமான மனநிலையை தருகிறது என்பது புலப்படுகிறது. அதேபோல் இதமான காற்றும் பசுமையும் மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகிறது இவ்வாறு உள்ள நிலப்பகுதியில் வாழும் மக்களின் மனம் இளகிய தன்மை கொண்டதாக இருப்பது இயல்பே. ஒருமனிதனின் மனநிலையை ஒரு நிலப்பரப்பு மாற்றிவிடும் என்பது நாம் அறிந்ததே. அதனால்தான் கோடை காலங்களில் நம் மனதிற்கு இதமான குளிர்ந்த இடத்தினை தேடி செல்கின்றோம். நம் உடம்பையும் மனநிலையும் சீராக வைக்கவே அவ்வாறு இடப் பெயர்வினை நம் மனம் விரும்புகிறது இதே போல் துயில் நாவலில் அழகர் தொழில் காரணமாக நடுமங்கலம் என்ற ஊருக்கு இடம் பெயர்கிறான். அழகரின் மனைவி எப்போதும் இறுக்கமான முகத்துடனும் எதையோ சிந்தித்துக் கொண்டிருக்கும் மன*

நிலையையும் உடையவள், அவளையும் நிலம் மாற்றுகிறது என்பதை

***"திறந்த ஜீப் என்பதால் காற்றில் செல்லும்போது அவனுக்கு சிரிப்பாக வந்தது சின்னராணியை திரும்பிப் பார்த்தான் அவள் கைகளால் காற்றை தடுப்பது போல முன்னாள் அசைக்கப்படி யேதானும் சிரித்துக் கொண்டு வந்தாள்" (துயில் ப-19)***

காற்றும் மரங்களும் நீர் நிலையும் காணப்படும் நிலப்பரப்பில் வாழ்வதற்கு கடினமான நிலப் பரப்பில் வாழ்வதற்கு மனதளவில் நிறைய வேறுபாடு காணப்படுகின்றது என்பதை ஆசிரியர் இவ்வரிகளின் மூலம் நமக்கு படம் பிடித்து காட்டுகின்றார். நிலமும் தொழிலும் மண் வளமும் நீர் ஆதாரமும் இருக்குமிடத்தில் வேளாண்மை செழிக்கும் நமது பண்பாட்டிற்கும் நாகரீக வளர்ச்சிக்கும் அடி ஆதாரம் நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகியவையே ஆகும் இவை ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. மக்கள் எந்த நிலப் பகுதியில் வாழ்கிறார்களோ அங்குள்ள வளங்களுக்கு ஏற்ப தொழில் அமைகிறது.

## நிலமும் தொழிலும்

குறிஞ்சி நிலத்தில் வாழ்பவர்கள் தேன் எடுத்தல் தொழிலையும் முல்லை நிலத்தில் வாழ்பவர்கள் கிழங்கு அழத்தல் தொழிலையும் மருதநிலத்தில் வாழ்பவர்கள் உழவு செய்தல் தொழிலையும் நெய்தல் நிலத்தில் வாழ்பவர்கள் மீன் பிடித்தல், உப்புவிற்றல் தொழிலையும் பாலை நிலத்தில் வாழ்பவர்கள் களவு செய்யும் தொழிலையும் கொண்டவர்களாக வாழ்ந்தனர். என்று தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் கூறுகிறது. இப்படி எந்த நிலத்தில் மக்கள் வாழ்கிறார்களோ அந்த நிலத்தில் அவ்வளங்களை பயன்படுத்தி அந்த தொழிலை மக்கள் செய்து வாழ்கின்றனர். என்று துயில் நாவலில் எஸ் ராமகிருஷ்ணன் அவர்களும் பறைசாற்றியுள்ளார். தனிக்குடி என்ற ஊரில் மழை இல்லாத காரணத்தினால். நிலம் மாறிபோகிறது அங்குள்ள மக்கள் களவில் ஈடுபடுவதை ஆசிரியர் காட்டுகின்றார்.

***"பகல் இரவாக வெக்கை வாரியடித்துக் கொண்டிருந்தது கரிசல் புமி வெடித்து பாளம் பாளமாகிப் போயிருந்தது" (துயில் ப - 148)***

***"ஊரில் திருட்டு மலிந்துபோக துவங்கியது இரவில் உறக்கமற்று போனவர்கள் பெருகினார்கள்" (துயில் ப -149)***

இவ்வரிகள் நமக்கு நிலவளம் இல்லாமல் போனால் அந்நிலத்தில் வாழும் மக்களின் தொழிலும் மாறுகிறது என்பது கண்கூடான உண்மை என்பது புலப்படுகிறது. நிலத்தின் வளத்திற்கு ஏற்ப தொழில்கள் தோன்றும். அப்போது அங்குள்ள மக்களிடம் நாகரிகம் வளர்கிறது. நம்மிடையே நாகரிகம் வளரும் போது பண்பாடும் தோன்றுகின்றது.

## நிலவியலால் பண்பாடு

பண்பாடு என்ற சொல்லுக்கு மனம் பக்குவமடைதல் என்பது பொருள் ஒரு பக்குவப்பட்ட மனிதன் என்ன சிந்திப்பான் என்றால். பிறருக்கு உதவி செய்து வாழ வேண்டும் என்றும். பிறர் நலன் பேன வேண்டும் என்றும் எண்ணுவான். அதுவே நமது பண்பாடு ஆகும். பண்பாட்டில் சில கூறுகளை எடுத்துக் காட்டாக கூறுகிறேன். நமது வீட்டிற்கு வந்தவர்களை இன் முகத்தோடு வரவேற்று உணவளித்தல், அவர்களுக்கு தங்குவதற்கு இடமளித்தல், உடுத்துவதற்கும் உடைஅளித்தல் இதுவே நமது பண்பாடாகும்.

நமது தமிழர் பாரம்பரியத்தின் உடை வேட்டி சேலை. இதை தேகம் ஒடிசலானவர்களும் குண்டானவர்களும் அணிந்து கொள்ளலாம் என்பதாலே இது நம் பாரம்பரிய உடையாக அணிகிறோம். இதனால் நம் வீட்டிற்கு வருபவர்களின் உடலமைப்பு எவ்வாறு இருந்தாலும் அவர்களுக்கு நம்உடையினைஅணியகொடுத்தால்அணிந்து கொள்பவருக்கு பொருத்தமாகவும் இருக்கும். மற்ற நாட்டவர் அணியும் உடைகளை அவர்கள் வீட்டிற்கு வரும் உறவினர்களுக்கு கொடுத்தால் அவர்களது உடல் அமைப்புக்கு பொருந்தாமல் போகலாம். ஆனால் நமது தமிழ்நாட்டு கலாச்சாரப்படி

*அணியும் உடை நமக்கு பயன்படுவது போல் பிறருக்கும் பயன்படுகிறது. இதுவே ஒரு பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டு இதேபோல் எத்தனையோ கூறுகள். தமிழரின் பண்பாட்டில் உள்ளன. இவ்வாறு ஒருமனிதன் பிறருக்கு பயன்பட்டுவாழ்கிறான்என்றால்அவன்வாழும் நிலப்பகுதி வளமானதாக இருக்க வேண்டும் அப்போது நற்பண்பானது பெருகி நாடு சிறக்கும்.*

**முடிவுரை**

*ஆதி மனிதன் தோன்றிய கால கட்டத்தில் நாகரிகமானது நதிக்கரைகளை ஒட்டிய நிலப் பகுதியை கொண்டே தோன்றியது எனலாம். ஒரு மனிதனுக்கு நீரும் உணவும் இருப்பிடமும் அவசியம். இம்மூன்றும் ஒருங்கே கிடைக்கும் நிலப் பகுதியில் மனித இனம் தழைக்கும். இவ்வாறு தழைத்தால் பண்பாடு வளரும். இதன் மூலம் நாகரீகம் வளர்ச்சி அடையும். இதிலிருந்து நிலவியலும் பண்பாடும் தொடர்புடையது என்பது நமக்கு தெளிவடைகிறது. எஸ் ராமகிருஷ்ணன் அவர்கள் நிலவியலை வர்ணனைப்படுத்தி கூறுவது நாம் அந்த இடத்திற்கே சென்றது போன்ற ஒரு உணர்வை ஏற்படுத்தும் விதத்தில் அமைப்பார். எடுத்துக்காட்டாக அழகர் என்பவன் தந்தையிடம் இருந்து ஓடிவரும் பொழுது செல்லும் பாதையை ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்.*

> ***“நடமாட்டம் இல்லாத வீதியின் வழியே ஓடி சுண்ணாம்பு கால்வாசல் சந்திப்பில் புகுந்து பேருந்து நிலையத்தின் பின்பக்கம் வந்து அங்கிருந்து புளியமர பாதைவழியாக ஓடி ஊரின் வடபுறத்திற்கு***
> ***வந்துசேரும் வரை அவன் திரும்பிப் பார்க்கவே இல்லை ஒருவேலிப் புதரை ஒட்டிய***
> ***இருளுக்குள் உட்கார்ந்து கொண்டான்”***
>
> ***(துயில் ப - 92)***

*என்று கூறுவதில் இருந்து அந்த நிலவியல் அமைப்பு நம் கண்முன்னே விரிகிறது. துயில் நாவலின் வழியே எஸ் ராமகிருஷ்ணன் அவர்கள் நிலவியல் மனிதனோடு எவ்வாறு தொடர்புடையது என்பது பற்றியும் வெய்யிலின் தன்மை பற்றியும் இக்கட்டுரையின் வாயிலாக உணரலாம்.*

**துணை நூற் பட்டியல்**


1. *துயில் - எஸ் இராம கிருஷ்ணன் தேசாந்திரி பதிப்பகம், புதிப்பு - ஏப்ரல் - 2018 சென்னை - 600093*
2. *தொல்காப்பியம் - பொருளதிகாரம் இளம்புரணார் உரை, சாரதா பதிப்பகம். பதிப்பு - 18 (2022 8), சென்னை - 600014*
3. *பொதுத்தமிழ் உரை - சோ. நடராசு சாருலதா பதிப்பகம், பதிப்பு: ஜூலை 2022 சென்னை - 600033*


**சுருக்க குறியீட்டு விளக்கம்**

1. *தொல் - தொல்காப்பியம்*
2. *சீறா - சீறாப்புராணம்*
3. *ப - பக்கம்*
4. *நூ - நூற்பா*
5. *சிலம்பு - சிலப்பதிகாரம்*